**கோயம்புத்தூர் வணிக வழக்குகள் நீதிமன்றம் (மாவட்ட நீதிபதி நிலை), கோயம்புத்தூர்**

**COS.No. 39 of 2025**

**2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 9ம் நாள் திங்கள்கிழமை 1969ம் ஆண்டின் 44 வது சட்டத்தின் ஏற்பாட்டின் திரு.கி.ஹரிகரன், எம்.எல்., நீதிபதி, வணிக வழக்குகள் நீதிமன்றம், (மாவட்ட நீதிபதி நிலை), கோயம்புத்தூர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | DW1–சுந்தர்ராஜ் | கிராமம்: | |
| த.பெ. | வேல்ராஜ் | வேலை: | |
| வயது | 43 | செல்போன் எண் | |

**முதல் விசாரணை:**

என் பெயர் சுந்தர்ராஜ், வயது 43, த/பெ.வேல்ராஜ். நான் தாக்கல் செய்துள்ள ஆணையுறுதி பத்திரத்தில் உள்ள வாசகங்கள் உண்மை என்றும், சரி என்றும் உறுதியளிக்கிறேன். அதை என் தரப்பு முதல் விசாரணையாக தாக்கல் செய்கிறேன். மேலும், என் தரப்பில் பின்வரும் ஆவணங்களை தாக்கல் செய்து குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1) 07.01.2013– Commercial Taxes Department Registration Certificate – Form B – நகல் (அசல் சரிபார்ப்பிற்காக தாக்கல் செய்யப்பட்டது)

2) 07.01.2013– Commercial Taxes Department Registration Certificate – Form D – நகல் (அசல் சரிபார்ப்பிற்காக தாக்கல் செய்யப்பட்டது)

3) 21.02.2013– District Industries Centre Acknowledgement – நகல் (அசல் சரிபார்ப்பிற்காக தாக்கல் செய்யப்பட்டது)

4) 31.12.2012– ARS Engineering Works Cash Bill/Invoice – அசல்

5) 31.10.2014– ARS Engineering Works Cash Bill/Invoice – அசல்

6) 25.05.2021– Udyam Registration Certificate – ஆன்லைன் நகல்

7) Google Search Screenshot – நகல்

8) பல தேதிகள் – Income Tax Return Verification Forms – ஆன்லைன் நகல்

9) 11.09.2024– WhatsApp Photos and Screenshots – நகல்

மேற்கண்ட ஆவணங்களில் நிரூபண வாக்குமூல பட்டியல் ஆவண எண் 1, 2, 3 ஆகியவை அசல் ஆவணத்துடன் ஒப்பீடு செய்து குறியீடு செய்ய ஏற்கப்பட்டது. நிரூபண வாக்குமூல பட்டியல் ஆவண எண் 6, 7, 8, 9 ஆகியவை கணிணியில் இருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட ஆவணங்கள் என்பதால் பிரிவு 63 பாரதிய சாட்சிய அதிநயத்தின் கீழான சான்று சமர்ப்பிப்பதற்கு உட்பட்டு இந்த ஆவணங்கள் குறியீடு செய்ய ஏற்கப்பட்டது. இவ்வாறாக நிரூபண வாக்குமூல பட்டியல் ஆவண எண் 1, 2, 3 ஆகியவை அசலுடன் ஒப்பீடு செய்தும், நிரூபண வாக்குமூல பட்டியல் ஆவண எண் 4, 5 ஆகியவை நேரடியாக குறியீடு செய்யவும், நிரூபண வாக்குமூல பட்டியல் ஆவண எண் 6, 7, 8, 9 ஆகியவை இந்திய சாட்சிய அதிநயம் சட்ட பிரிவு 63 இன் கீழான சான்று சமர்ப்பிப்பதற்கு உட்பட்டும் பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்பட்டது.

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:

Ex,B.4, Ex.B.5 ஆவணத்தில் வரியாக 5% தொகை குறிப்பிடப்பட்டுள்ளது, ஆனால் அவ்வாறு வரி செலுத்தப்படவில்லை என்று சொன்னால் சரிதான், அது labour charge.

Ex.B.1 ஆவணப்படி 07.01.2013 தேதியில் தான் உங்களுக்கு வணிகவரித்துறையால் நிறுவன பதிவானது வழங்கப்பட்டிருக்கும் நிலையில் Ex.B.4 ஆவணத்தில் உங்களால் TIN எண் அச்சிடப்பட்டிருக்க

முடியாது என்று சொன்னால் சரியல்ல, முதலில் TIN எண் கிடைத்துவிட்டது, அதன் பிறகு தான் வணிகவரித்துறை பதிவானது ஏற்பட்டது.

TIN எண் முதலில் உங்களுக்கு கிடைத்துவிட்டது என்பதைக் காட்டுவதற்கு நீதிமன்றத்தில் நீங்கள் ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் உண்மை.

07.01.2013 தேதியில் உங்களுக்கு பதிவு அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கும் நிலையில் TIN எண் அதற்கு முன்னதாகவே வழங்கப்பட்டு விட்டது என்பது போன்று தாக்கல் செய்யப்பட்டுள்ள Ex.B.4 மற்றும் Ex.B.5 ஆவணங்கள் இவ்வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணங்கள் என்று சொன்னால் சரியல்ல.

Ex.B.8, 2014 – 2015 ஆண்டில் தான் நீங்கள் வருமான வரி கணக்குகளை தாக்கல் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரிதான்.

நீங்கள் கடந்த 2012 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை வருமான வரி கணக்குகள் தாக்கல் செய்ததாக ஆவணங்கள் எதையும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான், நாங்கள் அப்போது பார்த்து வந்தது service work மட்டும் தான்.

31.12.2012 முதல் ARS Engineering Works என்ற நிறுவன பெயரை தொடர்ந்து நீங்கள் பயன்படுத்தி வருகிறீர்கள் என்பதை காட்டுவதற்கு நீங்கள் நீதிமன்றத்தில் ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் தவறு, தாக்கல் செய்துள்ளேன்.

31.12.2012 முதல் ARS Engineering Works என்ற பெயரில் நீங்கள் தொழில் செய்து வருகிறீர்கள் என்பதை காட்டுவதற்கு நீங்கள் தாக்கல் செய்துள்ள 9 ஆவணங்களில் எந்த ஆவணத்தைச் சார்ந்து அவ்வாறு

கூறுகிறீர்கள் என்று கூற முடியுமா என சாட்சியிடம் அவர் தாக்கல் செய்திருந்த 9 ஆவணங்களும் கொடுத்து கேட்கப்பட்டது, Ex.B.1 and Ex.B.9 ஆவணங்களை காண்பித்து சாட்சி இந்த ஆவணங்களின் அடிப்படையில் தான் கூறுவதாக தெரிவித்தார்.

கடந்த 2012 முதல் 2017 ஆம் ஆண்டு வரை நீங்கள் வருமானவரித் துறைக்கு செலுத்திய விற்பனை வரி கணக்குகளை இவ்வழக்கில் நீங்கள் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான், தாக்கல் செய்யவில்லை.

2017 முதல் 2025 ஆம் ஆண்டு வரை உள்ள GST கணக்குகளையும் இவ்வழக்கில் நீங்கள் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான், தாக்கல் செய்யவில்லை.

எங்கள் நிறுவனத்தின் வணிக வர்த்தக கணக்குகளை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

Ledger Bills பட்டியலை கடந்த 2012 முதல் தற்போது வரை நீங்கள் ARS Engineering Works நிறுவனம் பெயரில் தொழில் செய்து வருவதை காட்டும் விதமாக தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல, பில்களை தாக்கல் செய்துள்ளேன்.

நீங்கள் இரண்டு ரசீதுகளை மட்டும் தான் தாக்கல் செய்துள்ளீர்கள், அந்த மொத்த புத்தகத்தையும் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான்.

31.12.2012 முதல் ARS Engineering Works என்ற பெயரில் நீங்கள் தொழில் செய்து வருகிறீர்கள் என்பதை காட்டும் விதமாக ஆவணங்கள் எதையும் முழுமையாக தாக்கல் செய்யாத நிலையில் நீங்கள் 2012 ஆம்

ஆண்டு முதல் ARS Engineering Works என்ற பெயரில் தொழில் நடத்தி வருவதாக கூறுவதை ஏற்க முடியாது என்று சொன்னால் சரியல்ல.

Ex.A.14 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் முகவரி எனது முகவரிதான்.

நீங்கள் எந்திர தயாரிப்புகள் எதுவும் மேற்கொள்வதில்லை என்பதை காட்டும் விதமாக நீதிமன்றத்தில் ஆவணங்கள் சமர்ப்பிக்கவில்லை என்று சொன்னால் நான் எந்திரங்கள் எதுவும் தயாரிக்கவில்லை.

நீங்கள் என்ன விதமான தொழில் செய்கிறீர்கள் என்பதை காட்டுவதற்கு நீதிமன்றத்தில் ஆவணங்கள் சமர்ப்பிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

31.12.2012 தேதியிட்ட ஒரே ஒரு சேல்ஸ் பில்லை வைத்துக்கொண்டு ARS Engineering Works என்ற பெயரில் தொழில் செய்து வருவதாகவும், அதனால் வாதி நிறுவன Trade Mark–கிற்கு முன்பாகவே நீங்கள் தொழில் தொடங்கி விட்டதாகவும் கூறும் கூற்றானது ஏற்புடையது அல்ல என்று சொன்னால் சரியல்ல, தவறு.

வாதி நிறுவனம் ARS Engineering Works என்ற பெயரில் ஒரு Trade Mark பதிவு செய்து விட்டார்கள் என்பதை தெரிந்த பிறகு வாதி நிறுவனத்தின் மீது ஏதேனும் நடவடிக்கை எடுத்தீர்களா என்றால் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது எனக்கு தெரியவில்லை, அதனால் நான் நடவடிக்கை எடுக்கவில்லை.

உண்மையில் நீங்கள் 2012 ஆம் ஆண்டு முதல் ARS Engineering Works என்ற பெயரில் தொழில் நடத்தி வந்திருந்தால் வாதி மீது நீங்கள் நடவடிக்கை எடுத்திருப்பீர்கள், இல்லாத காரணத்தினால் தான் வாதி மீது

நடவடிக்கை எடுக்காமல் இருந்து விட்டீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

வாதி செய்துவரும் தொழிலை போன்ற ஒத்த தொழிலை நீங்கள் செய்து வருவதால் வாதி இவ்வழக்கில் கோரியுள்ள பரிகாரமானது அவருக்கு கிடைக்கக்கூடியது என்று சொன்னால் சரியல்ல.

உங்களுடைய கூற்று ஆவணங்களின்படி ஏற்கத்தக்கது அல்ல, எனவே வாதி கோரியுள்ளபடி அவருக்கு தீர்வு கிடைக்கத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

Ex.A.14 ஆவண அடிப்படையில் நீங்களும் வாதியும் ஒரே விதமான தொழிலை மேற்கொண்டு வருகிற காரணத்தினால் வாதி இவ்வழக்கில் கோரியுள்ள பரிகாரமானது அவருக்கு கிடைக்கக்கூடியது என்று சொன்னால் சரியல்ல.

குறுக்கு விசாரணை நிறைவுற்றது.

Sd/–K.Hariharan

Judge,
Commercial Court
(District Judge Cadre),
Coimbatore.